26.10.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயப் பணிகள்: திட்ட இயக்குநர் ஆய்வு



திருக்கோவிலூர் ஒன்றியத்தில் நடைபெற்று வரும் விவசாயத் திட்டப் பணிகளை மாவட்டத் திட்ட இயக்குநர் ஆர்.மணி திங்கள்கிழமை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தேவியகரத்தில் நடைபெற்று வரும் மண்புழு உரம் தயாரிப்புப் பணி, கீழத்தாழனூரில் நடைபெற்று வரும் நாற்றங்கால் பணி, பூமாரியில் நடைபெற்று வரும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புப் பணிகளை அவர் ஆய்வு செய்தார். பூமாரியில் 500 மரக்கன்றுகள் நடும் பணியைத் தொடங்கி வைத்தார். தொடர்ந்து,

திருப்பாலப்பந்தலில் நடைபெற்று வரும் வாய்க்கால் சீரமைப்புப் பணிகளை பார்வையிட்டார்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன், செல்வராஜ், ஒன்றியப் பொறியாளர்கள் பாலசுப்பிரமணியன், தனபால், ராதா உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விவசாயிக்கு பாதுகாப்பு!

தேசிய வேளாண் விளைபொருள் விற்பனை இணையதளம் (e-NAM) கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. முதல் கட்டமாக நாட்டில் உள்ள 250 வேளாண் சந்தைகளை இணைக்க திட்டமிடப்பட்டு, இந்த மாதம் 6-ஆம் தேதி அதைச் சாதித்தும் காட்டியுள்ளது மத்திய அரசு. அதுமட்டுமல்லாமல், இந்த வேளாண் சந்தைக்கான செயலியையும் அதே நாளில் தொடங்கி வைத்தது. தற்போது இந்த இணையதளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள 250 வேளாண் விளைபொருள் விற்பனைச் சந்தைகளும் 10 மாநிலங்களைச் சேர்ந்தவை. குஜராத் 40, சத்தீஸ்கர் 5, ஆந்திரம் 12, ஹரியாணா 36, இமாச்சல பிரதேசம் 7, ஜார்க்கண்ட் 8, மத்திய பிரதேசம் 20, ராஜஸ்தான் 11, தெலங்கானா 44, உத்தரப் பிரதேசம் 67 ஆகிய 10 மாநில விவசாயிகளும் இந்த செயலி மூலம் வேளாண் விளைபொருள்களின் விற்பனை மற்றும் விலை விவரங்களைக் காண முடியும். இந்த இணையதளச் சந்தையில் 1,60,229 விவசாயிகள், 46,688 வியாபாரிகள், 25,970 தரகர்கள் இணைந்துள்ளனர். இதுவரை ரூ.421 கோடி மதிப்புக்கான 1,53,992 டன் வேளாண் விளைபொருள்கள் விற்பனையாகியுள்ளன. தற்போது அரிசி, கோதுமை, காய்கறிகள், பழங்கள், தானியங்கள், எண்ணெய் வித்துகள் என 69 வேளாண் விளைபொருள்கள் இந்த இணையச் சந்தை மூலம் வர்த்தகம் செய்யப்படுகிறது. இதில் தோட்டக்கலைப் பயிர்களான பூக்களும் அடங்கும். மேலும் நான்கு மாநிலங்களின் 149 வேளாண் விற்பனை மையங்கள் இதில் இணையவுள்ளன. இன்னும் தமிழ்நாடு இதில் இணையவில்லை. இந்த இணையதளத்தில் (இ-நாம்) சேர்ந்து பயன்பெற வேண்டுமெனில், மாநில அரசு தனது வேளாண் விளைபொருள் விற்பனை மையத்தின் சட்டங்களில் சில திருத்தங்களைச் செய்தாக வேண்டும். இ-நாம் எதிர்பார்க்கும் திருத்தங்களைச் செய்ய தமிழ்நாடு, அஸ்ஸாம், புதுச்சேரி மூன்று மாநிலங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. ஆனால் இன்னும் அதைச் செய்யவில்லை. அதனால்தான்

இந்த இணையச் சந்தையில் நாம் சேராமல் இருக்கின்றோம். 2018 மார்ச்சுக்குள்ளாக இந்தியா முழுவதிலும் 585 வேளாண் விளைபொருள் விற்பனை மையங்களை இந்த இணையச் சந்தையில் சேர்த்துவிட வேண்டும் என்று மத்திய அரசு முனைப்புக் காட்டி வருகிறது. 2017 மார்ச்சுக்குள் குறைந்தது 400 விற்பனை மையங்களை இணைத்துவிடக்கூடும். வியாபாரிகள், தரகர்கள் வாங்கும் பொருள்களுக்கு நேரடியாக விவசாயியின் வங்கிக் கணக்கிலேயே பணத்தைச் செலுத்தவும், அதன் தகவல், மையத்துக்கு கிடைக்கவுமான வசதிகள் இந்த இணையச்சந்தையில் உள்ளன.

விவசாயிகளுக்கு இந்த இ-நாம் செயலியும் இணையச் சந்தையும் மிகப்பெரும் வாய்ப்பாக அமையப்போகிறது. விவசாயிகளுக்கு இந்தியா முழுவதிலும் ஒவ்வொரு வேளாண் விளைபொருளும் என்ன விலைக்குப் போகிறது என்பதை அறியவும், பொருள்களின் போக்குவரத்துச் செலவைக் கூட்டிப்பார்த்து, தங்கள் பொருளுக்கான விலையை நிர்ணயிக்கவும், யாருக்கு வேண்டுமானாலும் விற்கவுமான வாய்ப்பை இந்த இணைய தளம் வழங்குகிறது. பொருள்களின் விலை குறித்த நிலவரத்தை தெளிவாகக் காட்டினாலும், இந்த இணையச் சந்தை மூலம் விளைபொருளின் தரத்தை நிர்ணயிப்பது சற்று கடினமானவேலை. முதல் தரமான தானியம் என்று விலைபேசி, இரண்டாந்தர தானியத்தை அனுப்பினால் இந்தச் சந்தையின் நோக்கம் முற்றிலும் பாழாகிப்போகும். இந்த விவகாரத்தில் தமிழ்நாட்டின் வேளாண்துறை அதிகாரிகள் மற்றும் வேளாண் விற்பனைமையத்தின் ஊழியர்களின் பங்கும், அக்கறையும் இன்றியமையாதது.

தரத்தில் வேறுபாடுகள் இருந்தாலும்கூட, இ-நாம் இணையச்சந்தையில் பதிவுபெற்ற தரகர்கள் மூலமாகவே பிற மாநிலத்தவர் அல்லது மாவட்டத்தினர், இந்த விளைபொருள்களைக் கொள்முதல் செய்வார்கள் என்பது உறுதி. இந்த வணிகத்தில் தரகர்கள் அனுமதிக்கப்பட்டாலும், விலையைத் தீர்மானிக்கும் நபராக விவசாயி இருப்பதும், பணம் நேரடியாக விவசாயியின் கணக்குக்கு வந்து சேரும் என்பதும் மகிழ்வு தரும் செய்திகள்.

இ-நாம் இணையச் சந்தையில் தமிழக வேளாண் பொருள் விற்பனை மையங்களையும் சேர்ப்பதற்கு ஏதுவாக தமிழக அரசு உரிய சட்டத்திருத்தங்களை உடனடியாக அமலுக்குக் கொண்டு வருவது அவசியம். புதிதாக சேர்க்கப்படும் சட்ட விதிமுறைகள் என்பவை, இணையத்தின் வழியாக வணிகம் செய்வதற்கான

ஏற்புறுதி வழங்குவதும், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக கொள்முதல் பணம் செலுத்தப்பட வேண்டும் என்கின்ற கட்டாயங்களும் மட்டுமே. வேறு பெரிய திருத்தங்கள் இருக்கப்போவதில்லை. இதை உடனடியாகச் செய்தாக வேண்டும். இ-நாம் இணையச் சந்தை வந்துவிட்டதாலேயே தனியார் மண்டிகள் காணாமல் போய்விடாது. அவர்களும் தங்களை இந்த இணையத்தில் பதிவு செய்துகொண்டு விளைபொருள்களை வாங்கலாம். வழக்கம்போல, விவசாயிகளுக்கு கடன் கொடுத்து, உரம் கொடுத்து, தங்களிடமே அவர்கள் பொருள்களை விற்பனைச் செய்ய வேண்டிய கட்டாயத்துக்கும் உள்ளாக்கலாம். எதுவாக இருந்தாலும் தனது விற்பனைப் பொருளுக்கு இந்திய அளவில் ஒவ்வொரு தரத்துக்கும் விலை என்னவாக இருக்கிறது என்பதை விவசாயி அறிந்திருப்பார் என்பதால் அவரைத் தொடர்ந்து ஏமாற்றி விடவோ, சுரண்டவோ முடியாது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கூடுமானவரை விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு நியாயமான விலை கிடைப்பதையும், இடைத்தரகர்களின் சுரண்டலிலிருந்து பாதுகாப்பையும் தரக்கூடிய இந்த முயற்சி வரவேற்புக்குரியது. தமிழகம் இனியும் தாமதிக்கலாகாது!

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தேயிலை ஏலத்தை பழைய முறையில் நடத்த உத்தரவு

குன்னூர் : குன்னூரில், நான்கு வாரங்களுக்கு பழைய முறையில், தேயிலை துாள் ஏலத்தை நடத்த தேயிலை வாரியம் உத்தரவிட்டுள்ளது.

நீலகிரியில் உற்பத்தியாகும் தேயிலை துாள், குன்னூரில் உள்ள ஏல மையங்கள் மூலம் ஏலம் விடப்படுகிறது. இதில்,'பான் இந்தியா' திட்டத்தின் கீழ், சர்வதேச அளவில், எந்த பகுதியில் இருந்தும், ஏலத்தில் பங்கு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த செப்டம்பர் மாதம், 12ல் இருந்து, இந்த திட்டத்தில், சில மாற்றங்கள் செய்ததுடன், வங்கி நடைமுறையிலும் சில மாற்றங்கள்

செய்யப்பட்டன. இதனால், பண பரிவர்த்தனைகளில் பல்வேறு குளறுபடிகள் எழுந்ததாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக, கடந்த சில நாட்களுக்கு முன்பு, குன்னூரில் இருந்து சென்ற, தேயிலை தொழில் முக்கிய பிரதிநிதிகள், கோல்கட்டாவில் உள்ள தேயிலை வாரிய தலைவர் சாரங்கியை சந்தித்து நேரில் புகார் தெரிவித்தனர்.

இதை தொடர்ந்து,'ஏலத்தில் உள்ள புதிய நடைமுறையால் ஏற்பட்ட பாதிப்புகளை தொடர்ந்து, வரும் நான்கு வாரங்களுக்கு, பழைய முறைபடி தேயிலை ஏலத்தை நடத்த வேண்டும்' என, தேயிலை வாரிய தலைவர் சாரங்கி உத்தரவிட்டுள்ளார்.
சர்வதேச மேலாண்மையியல் ஆலோசகர் சுந்தர் கூறியதாவது:

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் கடந்த, 33 முதல் 41 வரையிலான ஐந்து ஏலங்களில், 55 கோடி ரூபாய் மதிப்பிலான தேயிலை துாள் மட்டுமே வாங்கப்பட்டுள்ளது. கடந்த, 41வது ஏலத்தில், 67 சதவீதம் துாள் மட்டுமே விற்பனையாகி, 33 சதவீதம் தேக்கமடைந்தது.

இதில், புதிய நடைமுறையில் ஏலம் நடந்ததால், தொழிற்சாலை உரிமையாளர்கள் பலருக்கும் பணம் கிடைக்கவில்லை. வரவு செலவுகள் பலருக்கும் முறையாக போய் சென்று சேரவில்லை.

இதனால், தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில், தொழிலாளர்களுக்கு 'அட்வான்ஸ்' பணம் கொடுப்பதிலும், பசுந்தேயிலை விலை நிர்ணயம் செய்த தொகையை வழங்குவதிலும், தொழிற்சாலைகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், பழைய முறைப்படி ஏலம் நடத்த உத்தர

விடப்பட்டது. அதன்படி நடந்த ஒரு ஏலத்தில், தேயிலை விற்பனை அதிகரித்துள்ளது. இவ்வாறு சுந்தர் கூறினார்.

## கறவை மாடு வளர்ப்பு பயிற்சி

கூடலூர் : கூடலூர், தொரப்பள்ளி குணில் பகுதியில், தோட்டக்கலை துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகாம் திட்டத்தில் கீழ், கறவை மாடு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

இதில், தொழில் நுட்ப மேலாளர் யமுன பிரியா வரவேற்றார். முகாமுக்கு, கூடலூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சிபிலாமேரி தலைமை வகித்து, நாட்டு மாடுகளின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

ஆவின் கால்நடை டாக்டர் பாரத்ஜோதி, 'கறவை மாடுகள் வளர்ப்பு, பராமரிப்பு முறைகள்; கோமாரி நோய் மற்றும் பூச்சிகள் தாக்குதலிலிருந்து மாடுகளை பாதுகாப்பது' குறித்து விளக்கினார். தோட்டகலை அலுவலர் பவ்யா 'தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்' குறித்து, விளக்கினார். திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சந்தியா, ரூபணி, மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## பசுந்தேயிலை மகசூல் குறைவு

கோத்தகிரி : கோத்தகிரி பகுதியில் பசுந்தேயிலை மகசூல் வெகுவாக குறைந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில், கோத்தகிரி பகுதியில் பசுந்தேயிலை விவசாயம் பிரதானமாக உள்ளது. இந்த ஆண்டு, வழக்கத்திற்கு மாறாக, பருவமழைப் பொய்த்துவிட்டதால், தேயிலை தோட்டங்களில், பசுந்தேயிலை மகசூல் படிப்படியாக குறைந்து வருகிறது. எஞ்சியுள்ள விளை நிலங்களில் சாகுபடி செய்த மலைக்காய்கறிகளின் விலையும் சரிந்துள்ளது. கோத்தகிரி பகுதியில், கடந்த வாரம் 'எட்டிபார்த்த' மழையால் மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், மழை தொடர்ந்து பெய்யாததால், தற்போது ஏமாற்றம் அடைந்துள்ளனர். பசுந்தேயிலை மகசூலும், வெகுவாக குறைந்துவிட்டது. இதனால், தோட்டகளுக்கு உரமிடுவது உள்ளிட்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.

## மரவள்ளி டன்னுக்கு ரூ.10 ஆயிரம்

திண்டுக்கல்:'மரவள்ளி கிழங்குக்கு ரூ.10 ஆயிரம் வரை விலை கிடைக்கும்' என, வேளாண் வணிக துணை இயக்குநர் மனோகரன் தெரிவித்தார்.அவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு,கேரளா, ஆந்திரா, நாகலாந்து ஆகியவை மரவள்ளி உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களாகும். இம் மாநிலங்களில் சாதகமற்ற வானிலையால் உற்பத்தி குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் 'வெள்ளை ஈ' தாக்குதலால் சில இடங்களில் உற்பத்தி குறைந்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலையில் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. இதில், உற்பத்தி குறைவால் தரமான மரவள்ளி கிழங்கிற்கு, அறுவடையின் போது டன்னிற்கு ரூ.9 ஆயிரம் முதல் முதல் ரூ.10 ஆயிரம் வரை விலை கிடைக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இதன் அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்கலாம் என, தெரிவித்தார்.

## தீவன ஆலை அமைத்தல்: விவசாயிகளுக்கு பயற்சி

பண்டுதகாரன்புதூர்: கால்நடைகளுக்கான தீவன ஆலை அமைக்கல், கலப்பு தீவனம் கரூர் அருகே விவசாயிகளுக்கு பயற்சி முகாம் கரூர் அருகிலுள்ள பண்டுதகான்புதூர் கால்நடை பல்கலை ஆராய்ச்சி மையத்தில் நடந்தது. இதுகுறித்து, கால்நடை பல்கலை ஆராய்ச்சி மைய தலைவர் வசந்தகுமார் கூறியதாவது: தீவன ஆலை அமைத்தல், கலப்பு தீவனம் தயாரிப்பது எப்படி என்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கரூர், தோகைமலை, கடவூர், வெள்ளியணை, க.பரமக்தி, அரவக்குறிச்சி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## அறுவடைக்கு தயாரான பாசிப்பயறு

கிருஷ்ணராயபுரம்: வீரராக்கியம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட பாசிப்பயறு, அறுவடைக்கு தயாராகி உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கிருஷ்ணராயபுரம் தாலுகா, கட்டளை வீரராக்கியம், உள் வீரராக்கியம் பகுதிகளில் மானாவாரி முறையில், பரவலாக சிறுதான பயரான பாசிப்பயறு சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. அது, தற்போது நன்றாக வளர்ந்து, செடிகளில் நல்ல முறையில் பாசிப்பயறு காய்கள் பிடித்து காப்பு பிடித்துள்ளது. அதனால், இவற்றை அறுவடை செய்ய விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். நடப்பாண்டு எதிர்பார்த்த அளவு, இப்பகுதியில் பாசிப்பயறு விளைச்சல் அடைந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## குறைந்தது முட்டைக்கோஸ் விலை

கூடலூர்;கூடலூரில் முட்டைக்கோஸ் விலை கடுமையாக குறைந்துள்ளதால், அறுவடை செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். கூடலூரில் கழுதைமேடு, வெட்டுக்காடு, பளியன்குடி, பெருமாள் கோயில், லோயர்கேம்ப், காஞ்சிமரத்துறை உள்ளிட்ட பகுதிகளில் முட்டைகோஸ் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில் 60 கிலோ எடை கொண்ட ஒரு மூடைக்கு மார்க்கெட்டில் ரூ.400 முதல் 450 வரை விலை உள்ளது. கடந்தாண்டு ரூ. 1,000 வரை விலை போனது. விலை மிகவும் குறைவாக உள்ளதால், அறுவடை செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

விவசாயி செங்குட்டுவன் கூறும் போது, “முட்டைக்கோஸ் அறுவடை செய்வதற்கான செலவு மட்டும் ஒரு மூடைக்கு ரூ. 300 வரை ஆகி விடுகிறது. இது மட்டுமில்லாமல், பராமரிப்பு மற்றும் உற்பத்திச் செலவுகள் ரூ. 300 ஆகும். இதனால் ஏக்கருக்கு ரூ.45 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படும். விலை உயருமா என்ற எதிர்பார்ப்பில் அறுவடை செய்யாமல் உள்ளோம்,” என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மரவாபாளையத்தில் மிளகாய் சாகுபடி பயிற்சி

நாமக்கல்: நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அருகே மரவாபாளையம் மற்றும் கூடச்சேரி கிராமத்தில் நடந்த விவசாயிகளுக்கான சிறப்பு பயிற்சி முகாமில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். பரமத்திவேலூர் மரவாபாளையம் கிராமத்தில், வேளாண்மை உதவி இயக்குனர் நமச்சிவாயம் மற்றும் வேளாண்மை அலுவலர் ஹேமலதா ஆகியோர் தலைமையில் பி.ஜி.பி., வேளாண்மை கல்லூரியை சேர்ந்த மாணவர்கள் கிராம தங்குதல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுடன் நேரடி பயிற்சியில் ஈடுபட்டனர்.

அக்கிராமத்தில் மிளகாய் சாகுபடி குறித்தும், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு நடந்தது. தொடர்ந்து விவசாயிகளின் கேள்விகளுக்கு, மாணவர்கள் விளக்கம் அளித்தனர். இதையடுத்து, கூடச்சேரி கிராமத்தில் நடந்த பயிற்சி முகாமில் நிலக்கடலை சாகுபடி குறித்து விவசாயிகளிடம் விவரிக்கப்பட்டது.

கடந்த தென்மேற்கு பருவமழை குறைந்த காரணத்தால், பயிர்கள் நீரின்றி வாடியுள்ளது. அதற்கு பொட்டாசியம் குளோரைடு கரைசல் தெளிப்பதன் மூலம் பயிரை பாதுகாக்கும் முறை செய்து காண்பிக்கப்பட்டது. பயிர் உற்பத்தி திறனை அதிகரிக்க, ஜிப்சம் உபயோகிக்கும் தொழில்நுட்பம் கற்றுத்தரப்பட்டது. இதில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயன்பெற்றனர்.

### நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்வு : 393 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று மேலும் 3 காசுகள் உயர்த்தப்பட்டு, 393 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்று, முட்டை விற்பனை நிலவரம் குறித்து ஆலோசித்தனர். இதில் முட்டை

விலையில் மேலும் 3 காசுகள் உயர்த்தப்பட்டது. இதையடுத்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 393 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 10 நாளில் முட்டை விலை 34 காசு வரை உயர்ந்துள்ளது.

தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதால், முட்டையின் தேவை அதிகரித்துள்ளது. இதுவே தொடர் விலை உயர்வுக்கு காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர். இதேபோல், ஒரு கிலோ முட்டைக்கோழி விலை □79 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி விலை □71 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.மற்ற மண்டலங்களில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ள முட்டை விலை விவரம்(காசுகளில்): ஐதராபாத் 383, விஜயவாடா 378, பர்வாலா 366, மும்பை 420, மைசூர் 402, பெங்களூர் 400, கொல்கத்தா 422, டெல்லி 400 காசுகள்.

## பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு வாய்ப்பு

பரமக்குடி, : புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகள் சேர வேண்டும் என்று பரமக்குடி வேளாண்மை இயக்குனர் தெரிவித்துள்ளார்.பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் இந்த ஆண்டு புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி பயிர் காப்பீட்டு திட்டத்தில் கடன் பெற்ற விவசாயிகள் கட்டாயமாகவும், கடன் பெறாதவர்கள் விருப்பத்தின் பேரில் பங்கேற்கலாம். இந்த திட்டத்தின் கீழ்இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கப்படும் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிர்களுக்கு பயிர் காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.இந்த மாவட்டத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பயிர் கடன் தொகையில் 1.5 சதவீதம் பிரீமியம் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நெல் பயிருக்கு 30.11.16 அன்றுக்குள் பயிர் காப்பீடு செய்யவேண்டும்.

எனவே அனைத்து விவசாயிகளும் காலம் தாழ்த்தாமல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய வங்கிகளில் காப்பீட்டு தொகை நெல் பயிருக்கு ரூ.21500க்கு பிரீமியம் தொகையாக ரூ.322.50 செலுத்தி பயனடையுமாறு, பரமக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

## தென்காசி பகுதியில் பலத்த மழை

தென்காசி: தென்காசி பகுதியில் நேற்று மாலை சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது. தென்காசி மற்றும் சுற்று வட்டாரத்தில் நேற்று காலை முதல் மாலை வரை வெயிலடித்தது. மாலை 6 மணியளவில் வானில் கருமேகக் கூட்டம் திரண்டு மழை பெய்தது. சுமார் ஒரு மணி நேரம் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனதால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவந்த நிலையில் நேற்று பெய்த மழையால் அப்பகுதி மக்களுக்கும், விவசாயிகளுக்கும் ஆறுதல் அளித்துள்ளது. இதே போல் அம்பை, கல்லிடைக்குறிச்சி, வி.கே.புரம், சுரண்டை, கடையம், ஆலங்குளம், பாவூர்சத்திரம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை ெபய்தது.